--

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண். 29 / 2023**

பெயர்- திரு. ராஜ்குமார் நாள்.02.12.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி**

1) தாவா சொத்தை தற்போது நான்தான் பொது அதிகார முகவர் என்ற முறையில் பராமரித்து வருகிறேன். நான் பொது அதிகார முகவர் ஆவணம் எழுதிக்கொடுத்த பிறகுதான் தாவா சொத்தை பராமரித்து வருகிறேன். தாவா சொத்தில் ரஸ்தாளி வாழை பயிர் செய்துள்ளேன். தற்போது விழைச்சல் முடிந்து அறுவடை செய்துவிட்டு, அடுத்த விவசாயத்திற்காக தயார் செய்து வருகிறேன். தாவா சொத்தான 2 ஏக்கர் முழுவதும் வாழை பயர் செய்திருந்தேன். 2 ஏக்கரின் சுமார் 400 கன்றுகள் நட்டிருந்தேன். ஒரு வாழைக்கன்றுக்கும் மற்றொரு வாழைக்கும் இடையே 30 அடி இடைவெளி விட்டு பயிர் செய்திருந்தேன். பயிர் செய்ததற்கு ரசீது வைத்துள்ளேனா என்றால், விவசாயத்தில் ரசீது வைக்கவில்லை. வாழை அறுவடையை வியாபாரிக்கு விற்பனை செய்தேன். நம்பிக்கை அடிப்படையில் ரசீது வாங்கவில்லை. தாவா சொத்திற்கு கிணறு மூலமாக தண்ணீர் பாய்ச்சி வருகிறேன். விவசாயம் அறுவடை முடியும் வரை தண்ணீர் இருந்தது, தற்போது மோட்டார் ரிப்பேர் என்பதால், தண்ணீர் பாய்ச்ச முடியாமல் உள்ளது. தாவா சொத்தில் வாதி அனுபவத்தில் இருப்பதை காட்டும் விதமாக வா.சா.ஆ-2 ஆவணமான கணினி பட்டாவை தாக்கல் செய்துள்ளேன்.

2) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-2 ஆவணம் நான்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ-2 ஆவணம் 2018-ல் பிரதிவாதி தங்கவேல் அவருடைய மகன் கதிரேஸ் குமாருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமாகும். வா.சா.ஆ.2 ஆவணம் எழுதிக் கொடுத்த தேதியிலேயே, கதிரேஸ்குமார் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்படாத சுவாதீன உறுதிமொழி பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால், அவ்வாறு ஆவணம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. வா.சா.ஆ-2 ஆவணம் பெயரளவில் ஏற்பட்ட ஆவணம் என்பதால், வா.சா.ஆ-2 ஆவணத்தை வைத்து இன்னொரு ஆவணம் வாதிக்கு கதிரேஸ் குமார் எழுதிக் கொடுத்தது செல்லாது என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ-2 மற்றும் வா.சா.ஆ-1 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், சரியல்ல. தாவா சொத்தில் வாழை பயிர் செய்யப்பட்டுள்ளதா என்பதை நீதிமன்ற ஆணையர் மனு செய்து பார்வையிட்டால், கண்டுபிடிக்க முடியுமா என்றால், முடியாது. அது அறுவடை செய்யப்பட்டுவிட்டது. நான் பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.12.02 17:05:49 +0530

District Munsif